# வேதாகமத்தின் வசனக் குறிப்புகள்

1) என் பிள்ளையே! என்னை நீ அறிந்திருக்க மாட்டாய். ஆனால் உன்னைப் பற்றிய சகலத்தையும் நான் அறிந்திருக்கிறேன். **சங்கீதம்** 139:1

2) உன் உட்காருதலையும் உன் எழுந்திருத்தலையும் நான் அறிந்திருக்கிறேன். **சங்கீதம்** 139:2

3) உன் வழிகளெல்லாம் எனக்குத் தெரியும். **சங்கீதம்** 139:3

4) உன் தலையில் உள்ள ரோமங்களைக் கூட நான் எண்ணியிருக்கிறேன்! **மத்தேயு** 10:29–31

5) ஏனெனில், நீ என்னுடைய சாயலில் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறாய். **ஆதியாகமம்** 1:27

6) நீ எனக்குள் பிழைக்கிறாய், அசைகிறாய், இருக்கிறாய். **அப்போஸ்தலர்** 17:28

7) ஏனெனில், நீ என்னுடைய சந்தானம்! **அப்போஸ்தலர்** 17:28

8) நீ கர்பத்தில் உருவாகும் முன்னே உன்னை அறிந்திருக்கிறேன். **எரேமியா** 1:4–5

9) இந்த உலகத்தை சிருஷ்டிப்பதற்கு முன்பே உன்னை தெரிந்து கொண்டேன். **எபேசியர்** 1:11–12

10) ஏதோ பிழையாக நீ உருவாகவில்லை. **சங்கீதம்** 139:15–16

11) ஏனெனில், உன் நாட்களெல்லாம் என் புத்தகத்தில் எழுதியிருக்கிறது. **சங்கீதம்** 139:15–16

12) உன் பிறப்பின் காலத்தையும், குடியிருப்பின் எல்லையையும் நான் முன்குறித்திருக்கிறேன். **அப்போஸ்தலர்** 17:26

13) பிரமிக்கத்தக்க அதிசயமாய் நீ உண்டாக்கப்பட்டாய்! **சங்கீதம்** 139:14

14) உன் தாயின் கர்பத்தில் நானே உன்னை உருவாக்கினேன். **சங்கீதம்** 139:13

15) ஓர் நாளில் உன் தாயின் வயிற்றிலிருந்து எடுத்தேன். **சங்கீதம்** 71:6

16) என்னை அறியாதவர்களால் நான் தவறாய் காட்டப்பட்டேன். **யோவான்** 8:41–44

17) நான் தூரமானவனும் கோபமுள்ளவனும் அல்ல. மாறாக அன்பின் முழு ரூபமும் நானே! **1 யோவான்** 4:16

18) உன்னிடம் முழுமையாய் அன்பு பாராட்டுவதே என் விருப்பம். **1 யோவான்** 3:1

19) ஏனெனில், நீ என் பிள்ளை! நான் உன் தகப்பன்! **1 யோவான்** 3:1

20) உன் உலகத் தகப்பன் தருவதைக் காட்டிலும் அதிக நன்மையானவைகளை நான் உனக்குத் தருகிறேன். **மத்தேயு** 7:11

21) ஏனெனில் நானே பூரண சற்குணமான தகப்பன். **மத்தேயு** 5:48

22) நீ பெறும் நன்மையான எந்த ஈவும் என் கரத்திலிருந்தே வருகிறது. **யாக்கோபு** 1:17

23) நானே உனக்கு கொடுப்பவன். உன் தேவைகள் அனைத்தையும் தருவேன். **மத்தேயு** 6:31–33

24) உன் எதிர்காலத்திற்கு நான் வைத்திருக்கும் திட்டங்கள் முழுவதும் நம்பிக்கைக்குரியதே. **எரேமியா** 29:11

25) ஏனெனில், அநாதி சிநேகத்தால் நான் உன்னை சிநேகிக்கிறேன். **எரேமியா** 31:3

26) உன்னைக் குறித்து நான் கொண்டிருக்கும் சிந்தைகள் கடலின் மணலைப் பார்க்கிலும் அதிகம்! **சங்கீதம்** 139:17–18

27) உன் மீது கொண்ட மகிழ்ச்சியில் நான் களிகூர்ந்து பாடுகிறேன். **செப்பனியா** 3:17

28) உனக்கு நன்மை செய்வதிலிருந்து நான் ஒரு போதும் பின் வாங்க மாட்டேன். **எரேமியா** 32:40

29) ஏனெனில் நீயே எனது பொக்கிஷம்! நிறைந்த சம்பத்தாய் இருக்கிறாய். **யாத்திராகமம்** 19:5

30) உன்னை வாழ வைப்பதற்கு என் முழு ஆத்மாவோடும் நாடுகிறேன். **எரேமியா** 32:41

31) பெரிதும் அதிசயமான காரியங்களை உனக்கு காட்ட நான் விரும்புகிறேன். **உரேமியா** 33:3

32) உன் முழு இருதயத்தோடு என்னை தேடு, அப்போது என்னைக் கண்டடைவாய். **உபாகமம்** 4:29

33) என்னிடத்தில் மனமகிழ்ச்சியாய் இரு. நானே உன் இருதயத்தின் விருப்பங்களை அருளிச் செய்வேன். **சங்கீதம்** 37:4

34) ஏனெனில், அந்த விருப்பங்களை நானே உனக்குத் தந்தேன். **பிலிப்பியர்** 2:13

35) நீ நினைப்பதற்கும் மேலாய் அதிகமாய் கிரியை செய்திட நான் வல்லவராய் இருக்கிறேன். **எபேசியர்** 3:20

36) நானே உன் இருதயத்தை தேற்றுபவன். 2 **தெசெலேனிக்கேயர்** 2:16-17

37) உன் சகல உபத்திரவங்களிலும் ஆறுதல் செய்யும் தகப்பனாகவே இருக்கிறேன். 2 **கொரிந்தியர்** 1:3-4

38) நீ நொறுங்குண்ட இருதயமாய் இருக்கும் போது உனக்கு சமீபமாய் இருக்கிறேன். **சங்கீதம்** 34:18

39) ஒரு ஆட்டுக் குட்டியை, மேய்ப்பன் சுமப்பது போல என் இருதயத்திற்கு அருகில் உன்னை அணைத்து சுமக்கிறேன். **ஏசாயா** 40:11

40) உன் கண்ணீர் யாவையும் ஒரு நாளில் நான் துடைப்பேன். **வெளிப்படுத்தல்** 21:3-4

41) நீ பூமியில் அடைந்த சகல துயரத்தையும் ஒழித்துப் போடுவேன். **வெளிப்படுத்தல்** 21:4

42) நான் உன் தகப்பன். என் குமாரன் இயேசுவை நேசித்ததைப் போலவே உன்னையும் நேசிக்கிறேன். **யோவான்** 17:23

43) ஏனெனில், உன் மீது நான் கொண்ட அன்பு இயசுவிலிருந்துதான் முதலில் வெளிப்பட்டது. **யோவான்**17:26

44) குமாரன் இயேசு என்னுடைய தன்மையின் ஸ்வருபமாகவே வந்தார். **எபிரேயர்** 1:3

45) நான் உனக்கு விரோதமாய் அல்ல, உன் பட்சத்தில தான் இருக்கிறேன் என்பதை வெளிப்படுத்தவே குமாரன் வந்தார். **ரோமர்** 8:31

46) உன் பாவங்களை விரல்விட்டா எண்ணிக் கொண்டிருக்கிறேன்? இல்லவே இல்லை! 2 **கொரிந்தியர்** 5:18-19

47) நானும் நீயும் ஒப்புரவாகிடத்தான் இயேசு மரித்தார். 2 **கொரிந்தியர்** 5:18-19

48) உன் மீது நான் கொண்ட அளவற்ற அன்பின் அடையாளமே அவரின் மரணம்! 1 **யோவான்** 4: 10

49) உன் நேசத்தை அடையும் படியே நான் நேசித்த அனைத்தையும் உனக்காக தந்துவிட்டேன். **ரோமர்** 8:32

50) என் குமாரன் இயேசுவை நீ பரிசாய் ஏற்றுக் கொண்டதால், என்னையே ஏற்றுக் கொண்டாய், 1 **யோவான்** 2:23

51) என் நேசத்தை விட்டு உன்னை இனி எதுவும் மீண்டும் பிரித்திட முடியாது! **ரோமர்** 8:38-39

52) உன் தகப்பன் வீட்டிற்கு வந்து விடு. பரலோகம் இதுவரை காணாத விருந்தை நான் உனக்குத் தருவேன். **லூக்கா** 15:7

53) நான் எக்காலத்தும் உன் தகப்பனாய் இருக்கிறேன். இனியும் உன் தகப்பனாய் எக்காலத்தும் இருப்பேன். **எபேசியர்** 3:14-15

54) என் ஏக்கமான ஒரே கேள்வியெல்லாம் நீ என் பிள்ளையாய் இருப்பாயா? **யோவான்** 1:12-13

55) நான் உனக்காக காத்திருக்கிறேன். **லூக்கா** 15:11-32